மனுஷ்ய புத்திரன் கவிதைகள்...❤️💞❤️ – The life of Mine

thelifeofmine3.wordpress.com/2024/06/22/poem-2/

June 22, 2024

ஒரே ஒரு வாழ்க்கை, ஒரே ஒரு உடல் எதற்கு எனக்கு நூறு நூறு மனங்கள்?🤔

ஒரு உறவுமுறை சொல்லாதவரை, ஒரு உறவுக்குப் பெயரிடாதவரை எல்லாப் புதிய உறவும் தித்திக்கத்தான் செய்கின்றன🥰

பெரிய மழை வரப்போகிறது என்கிறார்கள் வரட்டும் எவ்வளவு பெரிய மழைக்கும் அதே சினனக் குடைகளை வைத்துக்கொண்டு எவ்வளவு பெரிய துயரத்திற்கும் அதே சின்ன பிரியங்களை வைத்துக்கொண்டு பதுங்கிப் பதுங்கி எப்படியோ கடந்து விடுகிறோம் தானே 😌

இந்த அர்த்தமற்ற உறவை ஏன் தொடர வேண்டும்? (others opinion on my relationship) முறித்துக் கொண்டு மட்டும் என்ன வாழ்ந்துவிடப் போகிறேன்? அது அதைவிட அர்த்தமற்றதாக மாறிவிடும் இருப்பது போன்ற தோற்றங்களின் நிழலிலேயே இருந்து கொள்கிறேன்❤️💞❤️

உன்னையல்லால்

என் வெற்று அகந்தையே என் குருட்டு தைரியமே உன் நிழலில் கொஞ்சம் இளைப்பாறிக் கொள்கிறேன் உன்னைவிட்டால் எனக்கு வேறு யார் இருக்கிறார்கள்?🥹

ஏதாவது தேவை என்றால் தான் என்னிடம் வருகிறார்கள் நான் அதில் ஒன்றும் குறைகாண மாட்டேன் எதற்காகவாவது இன்னும் தேவைப்படுகிறேனே என்பதில் ஒரு நிம்மதி🙂

ஓர் அற்புதத்திற்காகக் காத்திருக்கிறேன் அது நிகழவேயில்லை அற்புதங்கள் இனி நிகழாதென்றே சகுனங்களும் சொல்கின்றன ஆனால் நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது அற்புதத்திற்கு முந்தைய ஒரு கணம் இன்னும் ஒரே ஒரு கணம்தான் என்று சொல்லிக் கொண்டேயிருக்கும் ஒரு கணம்🙃